பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 12உ (28—7—67) வெள்ளி ★ வெளியூர்: ஆடி 13உ (29—7—67) சனி [இதழ்: 38

அறுவடை முடிந்தால்தான்....!

பல்வேறு மாநிலங்களில் புதிய அறுவடை முடிந்து நெல் விற்பனைக்கு வரும்வரை அரிசி சம்பந்தமாக நிலைமை தொடர்ந்து சிரமமாகவே இருக்கும் என்று தெரிகிறது.

பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதிகள் எதிர்பார்த்தபடி இல்லாததே இதற்குக் காரணம். தன்னுடையமுந்திய பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பர்மா அரசுக்குச் சில சிரமங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

சிங்கப்பூர் தமிழர்கட்கு நெருக்கடி

'நாடற்றவர்'களாக வெளியேற்றப்படும் கெடுபிடி

சிங்கப்பூர் அரசின் அபாய அறிவிப்பு— இந்திய அரசு செய்யப்போவது என்ன ?

புதுடில்லி, சூலை 27—

சிங்கப்பூரில் உள்ள தமிழர்கட்கும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

சிங்கப்பூர்க் குடியுரிமை இழந்து, 'நாடற்றவர்' நிலையில் வெளியேறக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடும் என்ற 'அபாய அறிவிப்பு'க் கொடுக்கப்பட்டுள்ளது.

"பிரிட்டிஷ் தளங்களில் பணியாற்றும் இந்தியர் உட்பட எல்லா வெளிநாட்டவரும் தங்கள் வேலையை இழக்கும்போது, அவரவர், தங்கள் தாயகத்துக்குத் திரும்பிவிட வேண்டும்" என்று சிங்கப்பூர் அரசு அறிவுறுத்தியுள்ளது.

"தற்போது சிங்கப்பூரில் குடியுரிமை பெற்றிருக்கும் இந்தியர்கள் தங்கள் குடும்பங்களை இந்தியாவிலிருந்து அழைத்துவரக் கூடாது" என்றும் அரசு அறிவித்துள்ளது.

சிங்கப்பூரில் உள்ள பிரிட்டிஷ் தளங்களில் குறைந்த அளவு 10,000 இந்தியர்களாவது வேலை பார்த்து வருகின்றனர்.

மற்றவர்கள் தனிப்பட்ட நிறுவனங்களிலும், அரசிலும் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் நான்கில் மூன்று பங்கினரின் குடும்பங்கள் இந்தியாவில் உள்ளன.

அவர்களுக்கு 1975-ஆம் ஆண்டோடு வேலை முடிகிறது. 1975-ல் பிரிட்டிஷார் வெளியேறும்போது தங்களின் சிவிலியன் ஊழியர்களையும் வெளியேற்றப் போவதாக அறிவித்துள்ளனர்.

சிங்கப்பூர் குடியுரிமையை இழக்கும் இந்தியர்கள், 'நாடற்றவர்' களாகவே பிரித்து வைக்கப்படுவர் என்று இந்தியத் தூதவரகம் முன்னெச்சரிக்கை கொடுத்துள்ளது.

சிங்கப்பூரில் உள்ள இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

நிர்ணயிக்கப்பட்ட இலஞ்சவிகிதம்

★

கன்னட மாநிலத்திலுள்ள ஒரு துணை எஞ்சினீயர் பழைய மைசூரில் தாம் விரும்பும் ஒரு பகுதிக்கு இடமாற்றம் செய்து கொள்ள விரும்பினால், 1,200 ரூபாய் இலஞ்சம் கொடுக்க வேண்டும்.

'எழுத்தில் இல்லாத இந்த ஒப்பந்தப்'படி, இதற்காக 'ஒரு ஜூனியர் எஞ்சினீயர் செலுத்த வேண்டிய தொகை ரூ. 800; மற்றவர்கள் தர வேண்டியது ரூ. 400!

மைசூர் மாநிலச் சட்டமன்றத்தில் இந்தத் தகவலை வெளியிட்டவர் முன்னாள் காங்கிரசுக் காரரான ஹூச்மாஸ்தி கௌடா என்பவர்.

—'டெக்கான் ஹெரால்டு'

எழுச்சி நாள் பற்றி டில்லி அமைச்சர்

புதுடில்லி, சூலை 27—

"ஐந்தாவது உருக்காலை ஒன்றை அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தை அரசு கைவிட்டுவிடவில்லை"

என்று உருக்குத்துறை அமைச்சர் எம். சென்னா ரெட்டி நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

"சூலை 23-ல் தமிழகத்தில் நடத்தப்பட்ட எழுச்சி நாள் பற்றி டெல்லியின் கருத்து என்ன?"

என்று சிட்டா பாசு என்ற உறுப்பினர் கேட்டதற்கு அமைச்சர் அளித்த பதிலாவது:—

"எந்தப் பொருளாதாரச் சிக்கலையும் நன்கு ஆய்வு செய்து ஏற்றத்தாழ்வற்ற முறையில் முடிவு செய்வோம். அதற்குத் தடையாக எந்த நிகழ்ச்சியும் வராது."

பத்தாண்டுக் காலமும் - பல கோடி ரூபாயும் பாழ்!

இந்தி அகராதி தொகுப்புப் பணியின் சோக வரலாறு!

"இரண்டாவது உலகப் போரின் போது இந்தி அகராதி ஒன்றை உருவாக்கும் பணியை அனைத்திந்திய வானொலி மேற்கொண்டது; இந்த அகராதி பிறகு வெளியாகவே இல்லை!

"ஒரு இந்துஸ்தானி அகராதி தயாரிப்பதற்காக இந்திய அரசு, பண்டித சுந்தர்லால் என்பவருக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் தந்தது; இந்த இந்துஸ்தானி அகராதியும் பிறகு அச்சேறவே இல்லை!

"(டாக்டர் ஜாகீர் உசேன் அவர்களுடன் தொடர்புள்ள) 'ஜாமியா—மில்லியா'விற்கு, 'ஞான—சாகர்' வெளியிடுவதற்காக அரசு கொடுத்தத் தொகையையும் பாழ் என்றுதான் கருத வேண்டியிருக்கிறது!

"பத்து ஆண்டுகளையும், பல கோடி ரூபாய்களையும் செலவு செய்து மத்திய அரசின் கல்வித் துறை அமைச்சகம், 1962-ல் ஓர் அகராதி வெளியிட்டது; இந்த அகராதியின் அமைப்புக் குழுவில் உள்ள பலரைப் பற்றி இந்தி மொழியின் உயிரும் உள்ளமுமாக வாழ்கின்ற பலருக்கு ஒன்றுமே தெரியாது!

"இந்தியைப் பொறுத்த வரையில், மொழிப் பற்றிய விவாதம் அரசியல்வாதிகளிடமும், அந்த மொழியில் அகராதிகள் தயாரிப்பது, விஞ்ஞான—கலைத் துறை நடவடிக்கைகளைப் பெருக்குவது போன்றவை பொறுப்பற்றவர்களிடமும் ஒப்படைக்கப் பட்டுவிட்டது!

"அனுபவமற்றவர்களையும், அறிமுகமில்லாதவர்களையும் வைத்துக்கொண்டு இந்திய அரசு அகராதி தொகுக்கும் பணியில் ஈடுபட்டது! மிகவும் பலவீனமான அடிப்படைமீது கட்டடம் எழுப்புவதுபோல், அது, இந்திக்கான பணிகளைத் தொடங்கியது! எனவேதான் அந்தக் கட்டிடமும் சரிந்து கொண்டிருக்கிறது!"

—'தினமான்' (தில்லி)

(தகவல் ஜி. எஸ்.)

தி. மு. க. வரலாற்றில் புதிய அத்தியாயம்

"செப்டம்பர் 15—அண்ணாதுரை அவர்களின் பிறந்த நாள்! இந்த நாளில், பஸ் போக்குவரத்தில் ஒரு பகுதியைப் பொதுவுடைமை ஆக்குவதற்கான ஏற்பாடுகளைக் கழக அரசு அநேகமாக முடித்துவிட்டது!

"75 மைல்களுக்கு அதிகமான தூரம் பொதுத் துறைக்குக் கொண்டுவரப்பட்டு, அதில் அரசாங்க பஸ்கள் ஓட்டப்படும்!

"மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் கருணாநிதி, அண்ணாதுரை அவர்களின் மிகுந்த நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்பது மட்டுமல்ல—நீண்ட எதிர்கால நோக்குடைய சிறந்த அரசியல்வாதி என்றும், தான் மேற்கொண்ட முடிவில் உறுதியாக இருப்பவர் என்றும் புகழ் பெற்றவர்!

"பஸ் போக்குவரத்தின் ஒரு பகுதியைப் பொதுவுடைமை ஆக்குவதென்ற ஏற்பாட்டுடன் திராவிட முன்னேற்றக் கழக அத்தியாயத்தில் பெருமை சேர்க்கும் இன்னும் சில வரிகள் சேர்க்கப்பட்டுவிட்டன!"

புதுடில்லியிலிருந்து வெளிவரும் 'தினமான்' என்னும் இந்தி வார இதழில் மேற்கண்ட செய்தி வெளியாகியிருக்கிறது.

—(தகவல்: ஜி.எஸ்.)

டில்லிக்கு இந்தி பேசாத எம்.பி.-க்கள் எச்சரிக்கை

இந்தி வெறியர்கட்குப் பணிந்தால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து

ஆட்சிமொழி திருத்த மசோதாவை நிறைவேற்ற எவ்விதத் தயக்கமும் கூடாது!

புதுடில்லி, சூலை 27—

"இந்தி பேசாத பகுதி மக்களுக்குக் காலஞ்சென்ற தலைமையமைச்சர் நேருவால் வழங்கப்பட்டு, பின்னர் தலைமையமைச்சராக வந்த லால்பகதூர் சாஸ்திரியாலும் உறுதி செய்யப்பட்ட உறுதிமொழியை இன்றையத் தலைமையமைச்சரும், அரசும் செயல்படுத்தத் தவறினால், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கே ஆபத்து நேரும்—ஏற்கனவே தமிழகத்தில் இந்தியை எதிர்த்து மூண்டெழுந்த மொழிக் கிளர்ச்சியை அரசு தனது கவனத்தில் கொள்ளவேண்டும்; இந்தி பேசாத பகுதி மக்களின் நலம் காக்கப்பட வேண்டும்"

என்று, இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய அரசுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த அறிவுறுத்தலை உள்ளடக்கிய கோரிக்கை மனு ஒன்றில் இந்தி பேசாத பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்துப் பெறப்படுகிறது.

தமிழகத்தைச் சேர்ந்த இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான திரு. பி. இராமமூர்த்தி, இக்கையெழுத்து இயக்கத்தை முன்னின்று துவக்கியுள்ளார்; இதில், தமிழகம்—கேரளம் — ஆந்திரம்— கருநாடகம் ஆகிய தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி, மேற்கு வங்காளம், ஒரிசா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

"ஆட்சிமொழி மசோதாவை இந்தி பேசும் பகுதியினர் எதிர்க்கிறார்கள் என்பதற்காக அதனைக் கொண்டுவராமல் இருந்துவிடக் கூடாது நேருவின் உறுதி மொழியைச் செயல் படுத்துவதிலிருந்து அரசு பின்வாங்கக் கூடாது"

என்று இக்கோரிக்கை மனுவில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

"இந்த உறுதி மொழியைச் செயல்படுத்துவதற்கான பொறுப்பு, காங்கிரசுக் கட்சியையே சாரும்"

என்றும் அம்மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆட்சி மொழி மசோதாவை நிறைவேற்றக் கோரி, தலைமை அமைச்சரிடம் ஏற்கனதே இதே போன்ற கோரிக்கை மனு இரண்டு முறை கொடுக்கப்பட்டுள்ளது; மூன்றாவது முறையாக இப்போது கொடுக்கப்படவிருக்கிறது என்பது நினைவுகூரத்தக்கது.

எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த 100 பேராவது இதில் கையெழுத்திடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வடநாட்டைச் சேர்ந்த சிலர் உட்பட காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இதில் கையெழுத்திட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப் பட்டுவந்த ஆட்சி மொழித் திருத்த மசோதா, நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டவுடன் காங்கிரசு நாடாளுமன்றக் கட்சியைச்சேர்ந்த 200 உறுப்பினர்கள் இந்த மசோவுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்து ஒரு மனுவைக் கொடுத்தனர்; 'இந்தியை ஆட்சிமொழியாக்க இந்த மசோதாவில் காலக்கெடு கொடுக்கப்படவில்லை' என்பது அவர்களின் குற்றச்சாட்டு!

வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவது ஏன்?

புதுடில்லி, சூலை 27—

"வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 4 முதல் 5 சதவிகிதம்வரை அதிகரிக்கும் என்ற அடிப்படையில் நாட்டின் தொழில் நுட்டத் திட்டம் தயாரிக்கப்பட்டபோதிலும், சென்ற இரண்டு ஆண்டுகளில் அது குறைந்துவிட்டது"

என்று திட்ட அமைச்சர் அசோக் மேத்தா, நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

நாட்டில் பொறியியலாளர்களிடையேயும் தகுதி பெற்ற தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோரிடையேயும் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவது பற்றிக் கேட்டபோது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

நம்நாடு

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 12 (28—7—67) வெள்ளி

தூத்துக்குடித் துறைமுகம்—கடற்படைத் தளமாக வேண்டும்

[2]

தூத்துக்குடித் துறைமுகக் கடல் பகுதியை, திட்டமிட்டப்படி ஆழப்படுத்திச் சிறந்ததோர் துறைமுகமாக்கப்பட வேண்டியது இந்திய அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். இக்கடமைக்கு, எதிர்காலத்தில் அத்துறைமுகத்தின் வாயிலாக நடைபெறக்கூடிய ஏற்றுமதி—இறக்குமதி வாணிபத்தின் பெருக்கம் மட்டுமே காரணம் அல்ல.

இத்துணைக் கண்டத்தின் எதிர்காலப் பாதுகாப்பைப் பொறுத்தும், அத்துறைமுகக் கடல் பகுதியை ஆழப்படுத்துவதுடன், முன்னர் திட்டமிட்டிருந்ததைவிடக் கூடுதலான பரப்புடைய துறைமுகமாகவும் அமைத்தாக வேண்டும். இப்படி அமைத்திட வேண்டியது நாட்டின் எதிர்காலப் பாதுகாப்புக்கு இன்றியமையாததாகும்.

இந்தியாவின் நில எல்லையைவிடக் கடல் எல்லை, கூடியிருப்பதாகும். ஏறத்தாழ 3,600 கல் அளவுக்கு இத்துணைக் கண்டத்தின் கடல் எல்லை அமைந்திருக்கிறது.

நமது நாட்டின் கடல் எல்லை நீண்டிருப்பதற்கேற்ப, கடல் மூலம் ஏற்படக்கூடிய படையெடுப்பு அபாயமும் விரிந்திருப்பதாகும். எனவே, கடல் மூலம் ஏற்படக்கூடிய படையெடுப்பின் அபாயத்தைக் கணக்கிட்டுத்தான், நமது கடற்படையின் அளவையும் வரையறை செய்தாக வேண்டும்.

இதுபோன்றே, கடற்படை எந்த அளவுடையதாக இருந்திட்டாலும், இருக்கின்ற கடற்படையை, குறிப்பிட்ட ஒரு கடற்கரைப் பகுதியிலேயே வைத்திருப்பதும் கூடாது. அவ்வாறு வைத்திருப்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு கடற் பகுதியிலும், தக்க துறைமுகங்களைத் தேர்வு செய்து, கடற் படையைப் பரவலாக நிறுத்திவைத்திருக்க வேண்டும்.

நமது கடற்படையைப் பொறுத்தவரையில், மேலே எடுத்துக் காட்டியுள்ளதுபோல், பரவலாக நிறுத்திவைத்திருக்கும் முறை கையாளப்படவில்லை. இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலிருக்கின்ற பம்பாய்த் துறைமுகம், தலைமைக் கடற்படைத் தளமாக ஆக்கப்பட்டு, கடற்படையின் கணிசமான பகுதி அங்கு நிறுத்தப்பட்டிருக்கிறது.

இத்துடன், அதே மேற்குக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த கொச்சித் துறைமுகத்திலும் கடற்படையின் சிறு பகுதி நிறுத்தப்பட்டு, அது இரண்டாவது கடற்படைத் தளமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு கடற்படைத் தளங்களும், மேற்குக் கடற்கரைப் பகுதியில்தான் இருக்கின்றன. நமது நாட்டுக்கு மேற்கே உள்ள அரபிக் கடல் மூலம்' தாக்குதல் ஏற்படும்பட்சத்தில், அத்தாக்குதலைச் சந்தித்து முறியடிப்பதற்கு இவ்விரண்டு கடற்படைத் தளங்களும் நன்கு பயன்படும் என்பதில் ஐயமில்லை.

அரபிக் கடல் வழியாக மட்டுந்தான், கடல்வழித் தாக்குதல் ஏற்படக்கூடும் என்பதில்லை. இந்தியான் தெற்கு—கிழக்குக் கடல்கள் வழியாகவும், தாக்குதல் ஏற்படக்கூடும்.

அரபிக் கடல் வழியாக ஏற்படக்கூடிய தாக்குதலை முறியடிப்பதற்கு, பம்பாய்—கொச்சி ஆகிய இரண்டு கடற்படை தளங்களை அமைத்திருப்பது, நியாயமானதே ஆகும்; இராணுவத் துறையில் அவை சிறந்த ஏற்பாடுமாகும்.

ஆனல், இந்தியாவின் கிழக்குப் பகுதியிலிருந்தும், தெற்குப் பகுதியிலிருந்தும் ஏற்படக்கூடிய கடல்வழித் தாக்குதலை முறியடிக்க மேற்குக் கடல் பகுதியிலிருக்கின்ற இரண்டு கடற்படைத் தளங்களைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

கிழக்குக் கடல் பகுதி மூலம் ஏற்படக்கூடிய தாக்குதலை, மேலே குறிப்பிட்டிருக்கின்ற இரண்டு தளத்திலும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்ற போர்க் கப்பல்களைக் கொண்டுதான் சந்தித்தாக வேண்டிய நிலை இப்பொழுது இருந்துவருகிறது. இது விரும்பத்தகாத நிலை என்பதுடன் இதைச் சிறந்த பாதுகாப்பு ஏற்பாடாகக் கொள்வதற்குமில்லை.

இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டிலிருக்கின்ற பற்றுக்குறையை, இந்திய அரசாங்கம் உணராமலும் இல்லை; உணர்ந்திருக்கின்ற காரணத்தால்தான், கிழக்குக் கடற்கரைப் பகுதியிலிருக்கின்ற விசாகப்பட்டணத்தை மூன்ருவது கடற்படைத் தளமாக்கத் தீர்மானித்திருக்கிறது.

மூன்ருவது கடற்படைத் தளத்தை, கிழக்குக் கடற்கரைப் பகுதியிலிருக்கின்ற விசாகப்பட்டணத்தில் ஏற்பாடு செய்யும் இந்திய அரசின் முடிவும் முயற்சியும், இராணுவத் துறையில் முக்கியத்துவம் நிரம்பியதாகும். விசாகையில் மூன்ருவது கடற்படைத் தளம் அமைப்பது, இந்தியாவின் எதிர்காலப் பாதுகாப்புக்குப் பெருந்துணை செய்யும்.

விசாகையை மூன்ருவது கடற்படைத் தளமாக்க இந்திய அரசு ஏன் முன்வந்தது? அதற்கு எது காரணம்? இந்தியாவின் எதிர்காலப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டுதான், விசாகையில் மூன்ருவது கடற்படைத் தளத்தை அமைக்க இந்திய அரசு முனைந்திருக்கிறது.

இந்தியாவின் கிழக்குக் கடற்கரை, மேற்குக் கடற்கரையைவிட நீண்டிருப்பதாகும். இதுவுமன்றி, மேற்குக் கடல் வழியாக இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தைவிட, நீண்டு கிடக்கும் கிழக்குக் கடல் வழியாக ஏற்படக்கூடிய அபாயம், பல மடங்கு கூடுதலாக உள்ளது.

இப்பேராபத்தை இந்திய அரசு கருத்தில் கொள்ளும்பட்சத்தில், இப்பேராபத்திலிருந்து எப்படி இந்தியாவைப் பாதுகாப்பது என்பதற்குரிய விளக்கத்தை, அதனல் இலகுவாகப் பெறமுடியும். அந்த விளக்கம்தான், தூத்துக்குடித் துறைமுகக் கடல் பகுதியை ஆழப்படுத்துவதுடன், திட்டமிட்டதைவிட விரிவுபடுத்தி, அங்கு நான்காவது கடற்படைத் தளத்தை அமைப்பதாகும்.

அரபிக் கடல் வழியாக ஏற்படக்கூடிய படையெடுப்பு அபாயத்தைவிட, வங்காளக்குடாக் கடல் வழியாக ஏற்படக்கூடிய படையெடுப்பு அபாயம் கூடுதலானதாகும்; பயங்கரமான அழிவுச் சக்தியைக் கொண்டிருப்பதுமாகும்.

—கா. க.

பம்பாயில் புதுவகைச் சூதாட்டம்

பருத்தி விலைச் சூதாட்டத்துக்கு மாற்று ஏற்பாடாம்

இதற்கென்று தனி நிறுவனமே இயங்குவதாகத் தகவல்

"பலதரப்பட்ட விநோதச்செயல்களுக்கும் உறைவிடம்" என்று எண்ணப்பட்டுவரும் பம்பாய் நகரத்தில், இப்போது புதிய முறையிலான சூதாட்ட முறை ஒன்று பரவிவருகிறது!

அமெரிக்கப் பருத்தி விலைச் சூதாட்டம் இப்போது நடத்த முடியாமற் போய்விட்டதைத் தொடர்ந்து, அதைப்போன்ற முறையில் புதிய சூதாட்டம் ஒன்று நடத்தப்படுகிறது.

இதில் ஈடுபட்டிருக்கும் சமூக விரோதிகள், இதற்கென்று மத்திய நிறுவனம் ஒன்றை அமைத்து கட்டுதிட்டத்துடன் செயல்பட்டு வருகின்றனர்.

ஒரு பெட்டி சீட்டுக் கட்டிலிருந்து மூன்று சீட்டுக்களை எடுத்து, அதைக் கூட்டினல் வரும் விடையின் கடைசி எண்ணை 'ஓப்பனிங்' என்று வைத்திருக்கிருர்கள்; இது சரியாக 8-30 மணிக்கு நடைபெறுகிறது.

அடுத்து சரியாக 11-30 மணிக்கு மேற்சொன்ன முறையிலேயே சீட்டுக்களை எடுத்துக் கூட்டிய விடையின் கடைசி எண்ணை, 'குளோசிங்' என்றும் வைத்திருக்கிருர்கள்.

எல்லாச் சூதாட்டங்களையும் போலவே இதற்கும், முன்னதாகவே பணம் கட்டவேண்டும்.

சரியான விடை எழுதியவருக்கு 81 பங்கு பணம் கொடுக்கப்படுகிறது; அதாவது ஒரு ரூபாய் கட்டிய—சரியான விடை எழுதியவருக்கு 81 ரூபாய் கிடைக்கும்.

இதிலேயே இன்னொரு முறை; இதற்கு ஆறு சீட்டுகள் எடுக்கப்படுகின்றன.

மூன்று 'ஓப்பனிங்'குகளும் மூன்று 'குளோசிங்'குகளும் அது!

சரியான விடை எழுதியவர்களுக்கு 1 ரூபாய்க்கு 15,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது!

'மடிக்' என்ற செல்லப் பெயரில் அழைக்கப்படும் இந்தச் சூதாட்டத்துக்கு அனுமதிக் கட்டணம் ஏதுமில்லை!

25 காசுகளிலிருந்து எத்தனை ரூபாய் வேண்டுமானலும் இதில் பந்தயம் கட்டலாம்.

நகரெங்கும் இதற்கு வசூல் ஏஜெண்டுகள் உள்ளனர். இவர்களிடம் யாரும் பணம் கட்டி இரசீது பெற்றுக்கொள்ளலாம்.

நடுத்தர—ஏழை மக்கள், இதில் ஆர்வத்துடன் பந்தயம் கட்டுகின்றனர். பள்ளி மாணவர்கள் கூட இதில் ஈடுபடுகின்றனராம்.

மகாராட்டிரம், குசராத், இராஜஸ்தான் மாநிலங்களிலும் இவ்வியக்கத்துக்கு நல்ல செல்வாக்கு உள்ளதாம்.

விடையின் முடிவு தெரிந்ததும், நூற்றுக்கணக்கான ஆட்கள் அதைப் பல இடங்களுக்கும் எடுத்துச் செல்கின்றனர்.

இதில் இன்னொரு குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்ருல், இரண்டு பத்திரிகைகள்கூட இதன் விடைகளை வெளியிடுகின்றனவாம்.

வர்ப்போகும் விடைகள் என்னவாக இருக்கும் என்று முன்னதாகவே கணக்கிட்டுச் சொல்லும் சில 'திறமை'யாளர்கள் வேறு, ஏழைகளை ஆசைகாட்டி ஏமாற்றுகின்றனர்!

சில நாட்களுக்குமுன் மகாராட்டிர சட்டமன்றத்தில் இதுபற்றிக் கேள்விகள் எழுந்திருக்கின்றன. முதலமைச்சர் நாயக், 'நான் இப்பொழுதுதான் இதுபற்றிக் கேள்விப்படுகிறேன்' எனப் பதிலளித்தார்.

உள்ளங்களின்—நல்லெண்ணங்களின் ஆக்கிரமிப்பு!

சென்னை, ஜூலை 25—

"பிரிட்டிஷார் இந்தியாவை மீண்டும் ஆக்கிரமித்து, அடிமை கொண்டு வருகிருர்கள். முன்பு அவர்கள் ஆதிபத்தியத்திற்கு, 'விடுதலை இயக்கம்' இடையூருக இருந்தது; ஆனல், அவர்களது இப்போதைய ஆக்கிரமிப்புக்குக் குறுக்கிடு செய்ய எவரும் துணியமாட்டார்கள்! ஏனெனில், இது, உள்ளங்களின் — நல்லெண்ணங்களின் ஆக்கிரமிப்பாகும்!

"இது, காலம் உள்ளளவும் நிலைத்து நிற்கட்டும்! இதுவே, பிரிட்டிஷாரின் மகோன்னத கிறித்துவ நற்செயலாகும்! இந்திய மக்கள் இதனை ஒன்றுக்கு இரண்டாகத் திருப்பிக் கொடுப்பார்கள்!

"பிரிட்டன் போன்ற ஒரு நாட்டிலிருந்து இந்தியா உதவியை எதிர்பார்ப்பதற்கு உரிமை உண்டு; ஏனெனில், இந்திய மக்களின் உணர்வுகள்—மனப்போக்குகள் — ஆசைகள் — அவாக்கள்—வரலாறு ஆகியவற்றை அறிந்தவர்கள் பிரிட்டிஷார்!

"இந்தியாவினிடத்தில் அவர்களுக்கு அக்கறை உண்டு. இந்தியா வளமடைந்தால், 'உலகின் பரப்பளவில் பெரியதொரு பகுதி வளமடைகிறது' என்று பொருள்!

"உலகில்—வளம் ஓர் இடத்திலும், வறுமை மற்ருேர் இடத்திலும் இருக்கலாகாது! வறுமையோ — பிணியோ — துன்பமோ, பூகோள எல்லைக்கோடுகளை அறியமாட்டா! ஒரு பகுதியில் உள்ள வறுமை, மற்றப் பகுதிகளையும் பாதிக்கும்!

"எனவே, வளர்ச்சி அடைந்த நாடுகள், வளர்ச்சி அடைய முயன்றுவரும் நாடுகளுக்குத் துணை செய்யவேண்டும்."

—முதலமைச்சர் அண்ணு

(அடையாறு மருத்துவமனை திறப்பு விழாவில்

கருநாடகத்தில் ஒரு 'பசுவசேனை'!

கருநாடக மாநில காங்கிரசு அமைச்சர் கிருஷ்ண ஹெக்டே, மகாராட்டிரத்தில் இயங்கும் சிவசேனையைக் கண்டித்துப் பேசியிருக்கிருர்.

கண்ணுடி வீட்டில் அமர்ந்து கொண்டிருக்கும் தங்கள் கூட்டாளிகளின் மீதுதான் சிவசேனைக்காரர்கள் கற்களை வீசிக்கொண்டிருக்கிருர்கள்.

நிலம் ஒதுக்குவதானலும் சரி—அமைச்சரவையில் இடமளிப்பதானலும் சரி-'வெளியார்'கள் எவ்வித நன்மையும் பெற்றுவிடக்கூடாது என்பதில் மைசூர் மாநில அமைச்சரவை கண்ணுங்கருத்துமாக இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகிருர்கள்.

கருநாடகத்திலும் சிவசேனையைப் போன்ற ஒரு 'பசுவசேனை' இருப்பதாகவும் அது மிகவும் அடக்கமாகவும் திறமையாகவும் செயல்பட்டுவருவதாகவும் கூறுகிற அளவிற்கு ஒருவர் சிறு பிள்ளைத்தனமாகப் பேசியிருக்கிருர்.

—'டெக்கான் ஹெரால்டு'

(வாசகர் கடிதம்)

துணிச்சல் உள்ளவர்களா நாம்?

நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்ல அறிகுறி எது?

நாட்டரசன்கோட்டை ஜூலை 24—

"பெண் கல்வி, நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவுக்கு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள்.

"படித்த ஆண்கள் தவருன வழியில் செல்லும்போது, படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பிவிடுகிருர்கள். இந்தக் குடும்ப அறிவை, எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிருர்கள்! அவர்களுக்கு முறையான கல்வி அறிவும் கிடைத்தால், சமுதாயம் உயருவதற்கும், சந்ததிகள் வாழ்க்கை சீர்பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்!

"மேல் நாடுகளில் 100-க்கு 60 பேர்—70 பேர்—80 பேர்—90 பேர் படித்தவர்களாக இருக்கிருர்கள்!

"நம் நாட்டில், 100-க்கு 60 பேர் எழுத்தறிவற்றவர்களாக இருக்கிருர்கள்!

"ஆனல், 100-க்கு 80 பேர் அறிவுள்ளோர் வாழும் நாட்டு மக்கள், நம்மை மதிக்கவேண்டுமென்று எண்ணுகிருேம்! இப்படி எண்ணுவதற்கு நாம் மெத்தத் துணிச்சல்காரர்களாகத்தான் இருக்கவேண்டும்!

"ஓர்நாட்டின் வளர்ச்சியை கணக்கெடுக்கின்றபோது அங்கே எத்தனைத் தொழிற்சாலைகள் உள்ளன—எத்தனை ஆராய்ச்சிக் கூடங்கள் உள்ளன—எத்தனை மாட மாளிகைகள் உள்ளன என்று பார்ப்பதைவிட, 'அங்கே எத்தனைப்பேர் படித்திருக்கிருர்கள்' என்று பார்த்து, அதை வைத்து அந்த நாட்டின் முன்னேற்றத்தைக் கணக்கிட்டுவிடலாம்! இப்படிப் பள்ளிகள் பெருகுவதும், பள்ளிகளில் இட நெருக்கடி ஏற்படுகின்ற அளவுக்குப் படிக்கின்ற ஆர்வம் பெருகுவதும், ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்ல அறிகுறியாகும்!

"இதைச் செய்வது ஒரு அரசினுடைய வேலை என்று மட்டும் இருந்துவிடாமல், வசதி-வாய்ப்பு உடையவர்கள் இப்படிப்பட்ட அறிவாலயங்களைத் துவக்குவதில் ஈடுபட வேண்டும்!"

—முதலமைச்சர் அண்ணு

(கானடுகாத்தான் மகளிர் உயர்நிலைப் பள்ளித் துவக்க விழாவில்)

மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கும் நடவடிக்கை!

உயர் நீதிபதி கருத்தை உள்ளடக்கியே சட்டம் உருவாக்கப்படுகிறது

சு. ம. திருமண மசோதா பற்றி அமைச்சர் மாதவன் விளக்கம்

தமிழகச் சட்டமன்றத்தில், 'சுயமரியாதைத் திருமண மசோதாவை மக்கள் கருத்தறிய அனுப்பவேண்டும்' என்று எதிர்க் கட்சியினர் கொடுத்த திருத்தத்துக்குப் பதிலளிக்கும் வகையில் சட்ட அமைச்சர் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது.

'இம்மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்புவதன்மூலம் பொதுமக்களின் பிரதிநிதிகளால் ஆராயப்படவிருக்கிறது' என்றும், 'மக்களுக்கே நேரடியாக அனுப்பத் தேவையில்லை' என்றும் கூறி அமைச்சர் மேலும் விளக்கிப் பேசியதாவது:—

சட்டத்தின் நோக்கம்

இந்தச் சட்டத்தின் உட்பொருளை இரண்டு வகையில் பார்க்கலாம்; ஒன்றை, கொள்கைப் பிரச்சினையாக--பண்பாட்டுப் பிரச்சினையாக எடுத்து வாதிக்கலாம்; இரண்டாவதை, சட்டப் பிரச்சினையாக இன்றைக்குள்ள நிலைமையைப் பரிசீலிக்கலாம்.

கொள்கைப் பிரச்சினை என்ற அளவில், தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட திருமண முறையை, தமிழர் பண்பாட்டுப் பிரச்சினையாக—கலாசாரப் பிரச்சினையாக திராவிட நாகரிக அமைப்பாகக் கருதித் தந்தை ஈ. வெ. ரா. அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பேயே தொடங்கினார்கள். தொடர்ந்து இந்தச் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்று வந்திருக்கிறது; பலர் இந்த முறைப்படி திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள்; இவர்கள், பண்பாட்டுக்கு உகந்த முறையில் 'திருமணங்கள் இப்படித்தான் இருக்கவேண்டும்' என்றும் கருதுகிறார்கள். இந்த முறைப்படி அவர்கள் திருமணம் செய்துகொள்வதற்கு மற்றவர்கள் தடையாக இருக்கக்கூடாது என்பது, ஒரு பிரச்சினையாகாது.

இந்தச் சட்டப்படிச் சுயமரியாதை திருமணம் செய்துகொள்ளுகிறவர்களுடைய திருமணத்தையும் செல்லுபடியாக்கத்தக்கதாகச் செய்கிறதே தவிர, ஏற்கனவே இருக்கிற சட்டத்தில் உள்ள முறைகளின்படி திருமணம் செய்துகொள்வதைத் தடை செய்யவில்லை.

இந்தச் சட்டத்தின் நோக்கம் 'சுயமரியாதைத் திருமணங்களும் செல்லுபடியாக்கத்தக்கவை' எனச் செய்வதுதான்.

சமுதாயத் துறையில் புதுமையான முறைகள்

சமுதாயத் துறையில் மறுமலர்ச்சி ஏற்படுகின்ற காலத்தில் புதுமையான கருத்துக்களுக்கு--புதுமையான எண்ணங்களுக்கு--புதுமையான முறைகளுக்கு இடம் தரவேண்டுமென்பதை—சரித்திரத்தின் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு பார்த்தாலும் — ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

'இது ஒரு கட்சியினரால் நடத்தப்படுகிற திருமணங்கள் — ஒரு தலைவரால் நடத்தப்படுகின்ற திருமணங்களை செல்லுபடியாக்கத்தக்கதாகச் செய்யக்கூடாது' என்று வாதிடுவது நல்லதல்ல.

'சுயமரியாதைத் திருமணங்கள்' என்று இதைச் சொல்லுகின்றபோது, 'மற்ற திருமணங்கள் சுயமரியாதையற்றவையா' என்று கேட்கலாம், மற்ற திருமணங்களைப் பற்றி எடுத்துச் சொல்வது இந்தச் சட்டத்தின் நோக்கம் அல்ல; அவற்றைத் தடை செய்யவேண்டும்' என்பதும் இந்தச் சட்டத்தின் நோக்கம் அல்ல!

ஒரு குறிப்பிட்ட முறைப்படி திருமணங்கள் நடைபெற்று வருகின்றன; அவற்றுக்கும் வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்றமுறையில்தான் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது.

விடுபட்ட முறையைச் சேர்ப்பதே நோக்கம்

"இந்தச் சட்டம் ஏன் தேவைப்படுகிறது? இந்துக்களுக்கு மட்டும் ஏன் தேவைப்படுகிறது? இந்துக்கள் என்றால், இப்போதுள்ள சட்டத்தைப் பின்பற்றத்தானே வேண்டும்? எதற்காக மற்றொரு புதிய முறையை ஏற்படுத்திக்கொண்டு வாதிடுகிறார்கள்?" என்ற கேள்வி எழலாம்.

இதற்குப் பதில் சொல்லவேண்டுமானால், இந்து மதச் சட்டத்தின் வரலாற்றை ஆராய்ந்து நோக்கினால் விடை புலப்படும் என்று கருதுகிறேன்.

இந்திய நாட்டில் இன்றைக்கு இருக்கக்கூடிய இந்து மதச் சட்டத்தின் மூலம், வடமொழி நூல்களில் இருந்த விதிமுறைகள் எல்லாம் கிரகிக்கப்பட்டு இருக்கின்றன; அந்தக் கலாச்சாரம் பரவும்போது—இந்து மதச் சட்டத்தின் தொகுப்பைப் பார்ப்போமானால்—அந்தச் சட்டம் பிறப்பிக்கப்பட்டபோது ஆங்காங்கு என்ன என்ன பழக்க வழக்கங்கள் இருந்தனவோ அவைகளை எல்லாம் கிரகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காணலாம்; அதிலே மிஸ்ரா, தாயா போன்றவைகள் எல்லாம் வருகின்றன.

தென்னாட்டைப் பொறுத்தவரையிலும், இங்குள்ள பழக்கவழக்கங்கள் அந்தச் சட்டத்தில் கிரகிக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே விடுபட்ட முறையைத்தான் இப்போது சேர்க்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்தச் சட்டம் தேவை என்று அரசு கருதுகிறது.

'களங்கம்' எவ்விதம் உருவாயிற்று இங்கே?

இந்து மதச் சட்டத்தைத் தொகுத்த திரு. மெயின் அவர்கள் கூறியுள்ள கருத்தை, நான் இங்கே வைக்க விரும்புகிறேன்; அவர் கூறியிருப்பதாவது:—

"வடமொழி நூல்களிலும், தொகுப்புக் குறிப்புகளிலும் விளக்கப்பட்டுள்ளவாறு ஸ்மிருதிகள் அளித்த சட்டத் தொகுப்பே இந்து மதச் சட்டமாகும். அதோடு, தொன்மை வாய்ந்த வழக்கங்களை இணைத்தும் அல்லது காலத்தால் மாறுதல்கள் செய்தும் இந்து மதச் சட்டம் நீதிமன்றங்களில் ஆட்சிப்படுத்தப்படுகிறது.

"பழம் பெரும் இனத்தவர் அல்லது தங்களுக்கே உரிய தொல்பெரும் நாகரிகம் கொண்ட இந்து மதச் சட்டத்திற்கு முழுமையும் ஆட்படாத சமுதாயத்தினர், கொஞ்சம் கொஞ்சமாக இந்து மதக் கோட்பாடுகளின் பிடிப்புக்குள் வந்திருக்க வேண்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

"தென்னிந்தியா சம்பந்தப்பட்ட வரையில், தங்களுக்கே உரித்தான தனி நாகரிகச் சிறப்பைக்கொண்ட திராவிட மக்கள், ஆரியர்களின் நாகரிகம்—சட்டங்கள் ஆகியவற்றின் ஆதிக்கத்திற்குள் வரலாயினர்; அதன் விளைவு, ஆரியர்களும் — திராவிடர்களும் இந்துக் குடும்பத்தில் ஐக்கியமாயினர். இவ்வாறு பல நூற்றுண்டுக் காலமாக ஆரியர்களின் சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் ஏற்றுப் பின்பற்றத் தொடங்கினர்.

"ஆனால் இந்த நிலையிலும் திராவிடர்கள், தங்களுக்கேயுரிய தனித் தன்மைவாய்ந்த பழக்க வழக்கங்களை—திரிபுற்ற நிலையிலாயினும்—விடாது பின்பற்றி வந்தனர் என்பதில் சந்தேகம் இல்லை.

"பிற்காலத்தில் தோன்றிய இதிகாசங்களும், புராணங்களும், அவைகளைப் பின்பற்றி திராவிட மொழிகளில் வெளிவந்த நூல்களும் திராவிடர்களிடையே தோற்றுவித்த நம்பிக்கை, தென்னிந்தியாவில் ஆரியர் கலாச்சாரமும், இந்து மதச் சட்டமும் பரவி வளரத் துணைபுரிந்தது."

கருத்து வேறுபாடு இருப்பதற்கில்லை

இதைச் சொல்வதனால், 'கலாச்சார போராட்டத்தைப்பற்றி நினைவுபடுத்துகிறேன்' என்று எண்ணவேண்டாம். அதற்கு மாறாக, அப்படிப்பட்ட ஒரு காலக் கட்டத்தில் இரண்டு சமுதாயம் சேர்ந்தபோது ஏற்பட்ட பழக்க வழக்கங்கள், இந்து மதச் சட்டத் தொகுப்புக்களில் கிரகிக்கப்பட்டன.

விடுபட்டுப்போன திருமண முறையைத்தான் இந்து மதச் சட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று இப்போது விரும்புகிறோம்; இதற்காகத்தான் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இது கொள்கைப் பிரச்சினை—கருத்து வேறுபாடு இருப்பதற்கில்லை.

சந்ததிகளுக்குச் சட்டப் பாதுகாப்பு

அடுத்து, சட்டப் பிரச்சினையைக் கருதவேண்டும். சுயமரியாதைத் திருமணத்தைத் தங்களுடைய அடிப்படைக் கொள்கையாகப் பலர் பின்பற்றிவந்திருக்கிற காரணத்தினால், அப்படித் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு—அவர்களுடைய சந்ததிகளுக்குச் சட்டப் பாதுகாப்பு அளிக்கவேண்டிய நிலைமை இன்றைக்கு நாட்டில் இருக்கிறது.

1955-ம் ஆண்டில்தான் இந்து மதத் திருமணச் சட்டம் தொகுக்கப்பட்டது. அதற்கு முன்னால் 1954-ல் தமிழக உயர் நீதிமன்றத்தில் சுயமரியாதைத் திருமணங்களைப் பற்றிய அடிப்படை முறைகளைப் பற்றி பரிசீலனை செய்யவேண்டிய சந்தர்ப்பம் எழுந்தது. அப்போது உயர் நீதிமன்ற நீதிபதிகள், 'சுயமரியாதைத் திருமண முறையில் பின்பற்றக்கூடிய முறைகள் தவறு' என்று சொல்லவில்லை; 'நம்முடைய சமுதாயத்தின் கொள்கைகளுக்கு முரண்பட்டது' என்றும் சொல்லவில்லை.

நமது வாதத்தை அவர்களும் மறுக்கவில்லை!

1955-ம் ஆண்டு தொகுக்கப்பட்ட சட்டத்தில், 'சாத்திர முறைப்படி சில பழைய முறைகள் பின்பற்றப்பட வேண்டும்; எனக் கூறப்பட்டிருக்கிறது. அம்மி மிதித்தல்—அருந்ததி பார்த்தல் என்பதாக—'சப்தவதி' என்று சொல்லுகிறார்கள்—இந்தமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று இருக்கிறது.

'இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று சொல்லுகின்றவர்கள் வாதத்தை நாங்கள் மறுப்பதில்லை; அதை ஏற்றுக்கொள்கிறோம்; ஆனால் அதனுடன், 'சுயமரியாதை முறையிலும் திருமணங்கள் நடக்கின்றன—அவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்' என்பதுதான் வாதம்.

இதைப் பரிசீலித்த நீதிபதிகள், 'சுயமரியாதைத் திருமணங்கள் செல்லத்தக்கதல்ல' என்று கருதவில்லை; 'சுயமரியாதைத் திருமணங்கள் தமிழர்களின் பண்பாட்டுக்கு எதிரானது' என்றோ, 'சமுதாயத்திற்குத் தீமை' என்றோ சொல்லவில்லை.

அப்போது அவர்கள் தெரிவித்த கருத்தை இந்த மன்றத்திற்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"சாத்திரங்களும், பண்டையப் பழக்கவழங்கங்களும் தோற்றுவித்த திருமணமுறைகளை எளிய முறையில் மாற்றி அமைக்க முயல்வது போற்றுதற்குரிய முயற்சியாக இருக்கலாம்; ஆனால் இந்த மாறுதல்களைத் தனிப்பட்ட கூட்டத்தினர், பல்வேறு சமூகங்களிலிருந்து இணைந்து செயல்பட்டாலும் சட்டமாக்க முடியுமா?

"இந்து மதத் திருமண முறைகளை விரும்பாதவர்களுக்கு அல்லது 'நாங்கள் வகுத்திருக்கும் புதுமுறைகள் தொன்மைத்தன்மையால்—சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியவை' என நிரூபிக்க முடியாதவர்களுக்கு ஒரே வழிதான் உள்ளது. அவர்களுடைய திருமணங்களைத் தற்போது அமுலில் உள்ளசட்டங்களின்கீழ் பதிவு செய்துகொண்டு, அதன் பின் விளைவுகளை ஏற்கத் தயாராக வேண்டும். அல்லது, தங்களுடைய திருமண முறைகளை ஒழுங்குபடுத்தத் தேவையான சட்டத்தை உருவாக்கும்படி சட்டமன்றங்கள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்."

தீமை ஏதும் இல்லை---நன்மைதான் உண்டு

மக்கள் குரலுக்குச் சட்டமன்றங்கள் மதிப்பு அளிக்க வேண்டுமென்ற முறையிலே உயர் நீதிமன்ற நீதிபதிகள் சொன்னார்கள். இன்றைக்கு அரசாங்கம் மக்கள் குரலை ஏற்று அதற்கு மதிப்பு அளிக்கின்ற முறையிலே புதிய சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது.

இதே முறை ஏற்கனவே பின்பற்றப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த மன்றத்தில் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மேற்கு வங்காளத்தில் இந்தத் திருமண முறையிலே புதிய கொள்கைப் பிரச்சாரம் பிரம்மசமாஜத்தால் செய்யப்பட்டுவந்தது; அந்தக் கொள்கைக்கு அன்றிருந்த வெள்ளையர் அரசாங்கம் மதிப்பு அளித்து அதை ஏற்றுக்கொண்டு, ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். நம்முடைய மாநிலத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற இந்தக் கொள்கையைச் சட்டப்பூர்வமாக்க வேண்டுமென்பதில் யாருக்கும் தீமை இல்லை—நன்மைதான் இருக்கிறது."

செல்வங்களை இழந்ததற்கு என்ன காரணம்?

பேசிவிட்டு வந்தவரால் பலனென்ன கிடைத்தது?

நாட்டரசன்கோட்டை, ஜூலை 24—"எந்தப் பகுதிக்குள் வந்தால் செல்வம் கொழித்துக் கொண்டிருக்குமோ-எந்தப் பகுதிக்குள் நுழைந்தால் கோட்டை கொத்தளங்களைப் போன்ற மாளிகைகளைக் காணமுடியுமோ—எந்தப் பகுதிக்குள் வந்தால் சீமான்கள் உலவிக்கொண்டிருப்பார்களோ—அந்தப் பகுதி இன்று, களை இழந்து காணப்படுவதை நான் மெத்த வருத்தத்தோடு உணருகிறேன்.

"செல்வங்களை இழந்ததற்கு என்ன காரணம் என்று ஆராய்ச்சி தேவையில்லை; ஆனால் அவர்கள் துயர் துடைக்கப்பட வேண்டும்—அதை இந்த அரசு செய்யும் என்று உறுதி தருகிறேன்.

"நான் டெல்லி சென்றிருந்த நேரத்தில் தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் உங்கள் பிரச்சினை பற்றிப் பேசினேன். பர்மாவைவிட்டு நகரத்தார்கள் வெளியேறியபோது தங்கள் சொத்துக்களை 20 ஆயிரம்—30 ஆயிரம்—40 ஆயிரம்—இலட்சம் என்ற அளவில் விட்டுவிட்டு, வெறுங் கையோடு வந்திருக்கிறார்கள்! அவர்கள் எல்லோரும் விட்டு வந்த சொத்தின் மதிப்பு மட்டும் ரூ. 50 கோடி!

"அதை அவர்களிடமிருந்து நியாயமான வழிகளில் பெற நான் மத்திய அரசுக்குப் பல யோசனைகள் கூறியிருக்கிறேன். இது பற்றிப் பேச வெளிநாட்டு அமைச்சர் பர்மா சென்று பேசிவிட்டு வந்தாரே தவிர, பலன் கிடைத்ததா என்றால், கிடைக்கவில்லை!

"உங்களுக்குத் தக்க பலன் கிடைக்கத் தமிழக அரசு முயற்சி செய்யும் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்."

--அறிஞர் அண்ணா

(கானாடுகாத்தான் மகளிர் உயர் நிலைப் பள்ளித் துவக்கவிழாவில்)

---

14 காரட் அடிப்படையில் தங்கக் கட்டுப்பாடு

'புதிய மசோதா வரும்' என்கிறார் மொரார்ஜி தேசாய்

புதுடில்லி, ஜூலை 26—

"14 காரட் அடிப்படையில் தங்கக் கட்டுப்பாடு, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது; அந்தக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு தங்கக் கட்டுப்பாடு மசோதா உரிய காலத்தில் இந்த அவை முன் வரும்"

என்று மொரார்ஜி தேசாய், மக்களவையில் கூறினார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"14 காரட் திட்டம்தான் அரசின் நீண்ட காலத் தங்கக் கொள்கை; பாதுகாப்புச் சட்ட விதிகள் மறைந்தபின் சமுதாயம் ஏற்கக்கூடிய முறையில் படிப்படியாக நடைமுறைக்கு வரும் வகையில் புதிய தங்கக் கட்டுப்பாடு மசோதா வரும்."

சீரணிப் படையில் சேர வாரீர்!

நாட்டின் நலனுக்கான பல திட்டங்களைத் தாரீர்!

உத்தியோகத்தை நாடாமல் சொந்தத் தொழில் நடத்த முனைவீர்!

பொறியியல் மாணவரிடை முதலமைச்சர் அண்ணா அறிவுரை

சென்னை, சூலை 27—

"தகுதிபெற்ற எஞ்சினீயர்கள் வேலையில்லாமல் தவிப்பதாகக் கேள்விப்பட்டு மனம் வேதனையடைந்தேன். நாடு வளம்பெறுவதற்காகப் பல திட்டங்களை மேற்கொள்ளவிருக்கும் நேரத்தில்—பல திட்டங்களை முடிக்க இருக்கும் நேரத்தில், இவ்வாறு நேர்ந்திருப்பது வருத்தமாக இருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், கிண்டி பொறியியல் கல்லூரி மாணவர் மன்றத் திறப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

கல்லூரி மாணவர்கள்—பேராசிரியர்கள் சார்பில், தீ விபத்து நிவாரண நிதிக்கு ரூ. 3,001 அளிக்கப்பட்டது.

மாணவர்கள் தொண்டுள்ளம்—முதலமைச்சர் பாராட்டு

சென்னை மாநகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்காகக் குடிசைப் பகுதிகளுக்குச் சென்று தங்கள் உழைப்பினை அளித்திட முன்வந்த கிண்டி பொறியியல் கல்லூரி மாணவர்களில் 70 பேர்களின் பெயர்களடங்கிய பட்டியல் ஒன்று அண்ணா அவர்களிடம் அளிக்கப்பட்டது; அப்பெயர்களை அவையோருக்கு ஒவ்வொன்றாகப் படித்துக் காட்டி அண்ணா அவர்கள், அம்மாணவர்களின் தொண்டுள்ளத்தைப் பாராட்டினார்.

பொது அறிவு அவசியம்

முதலமைச்சர் அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"எஞ்சினீயர்களும் தொழில்நுட்பப் பட்டதாரிகளும் சொந்தத்தில் தொழில் நடத்துவதற்கு முற்பட வேண்டும்; அரசாங்கத்திலும் தனியார் நிறுவனங்களிலும் உத்தியோகத்தை நாடிச் செல்வதைவிட அது நல்லது.

எஞ்சினீயர்களாகப் போகும் மாணவர்கள் குறைந்த செலவில் வீடுகள் கட்டுவதற்குரிய மாற்றுக் கட்டுமான நுட்பங்களையும், மாற்றுப் பொருள்களையும் கண்டுபிடிக்க வேண்டும்.

தனிப் பயிற்சிகுத் துணையாகவும் இணையாகவும் பலமுனைச் செய்முறைகளைப் பாகுபாடாக அமைத்துக்கொள்வது அவசியம்.

மாணவர்களுக்குப் பொது அறிவு மிகவும் அவசியம். அரசியல் நடப்புகள் உட்பட எல்லாவற்றையும் தெரிந்துகொள்வது முக்கியம்."

'சீரணி'யில் சேர்ந்து தொண்டாற்ற வாரீர்!

'சீரணி'யில் சேர்ந்து தொண்டாற்ற வருமாறு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்துப் பேசுகையில், அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"'சீரணி' என்றதுமே சிலருக்கு, 'செங்காவலர் படை' நினைவுக்கு வந்துவிட்டிருக்கிறது; 'இங்கே செங்காவலர் படையை உருவாக்காதீர்கள்' என்று சொல்லுகிறார்கள்!

"இப்படிச் சொன்னவர்கள் சீரணவைப் பற்றித் தெரிந்துகொள்ளவில்லை என்பதுடன், என்னையும் புரிந்துகொள்ளாதவர்களாக இருக்கிறார்கள்!

அரசியல் நோக்கம் எதுவும் கிடையாது!

'சீரணி'க்கு அரசியல் நோக்கம் எதுவும் கிடையாது. இத்தகைய சீரணியில் மாணவர்கள் சேர்ந்து உழைப்பதன்மூலம், அரசு செய்யக்கூடியதைக் காட்டிலும் மக்களுக்கு அதிக நன்மைகளைச் செய்ய உங்களால் இயலும்!

பொறியியல் கல்லூரியின் முதிய மாணவர்கள், குடிசைப் பகுதிகளைப் பார்வையிட்டு, 'எந்தெந்த வகையில் வீடுகளைச் சீரமைக்கலாம்' எனத் திட்டம் வரைந்து தரலாம்; அது, நல்ல உதவியாக இருக்கும்.

பல்வேறு வீடுகட்டும் திட்டங்களை ஆராயும்போது, திட்டங்களுக்குத் திட்டம் செலவு அதிகரிப்பதாகவே தெரிகிறது. இந்த வகையில் பொறியியல் கல்லூரியின் மாணவர்கள் கவனம் செலுத்தி, செலவுகளைக் குறைக்க யோசனைகள் கூறி உதவலாம்.

உங்கள் அறிவு—உழைப்பு-நேரம் ஆகியவற்றை நல்கி, நீங்களும் நாட்டின் மறுமலர்ச்சிப் பணியில் பங்குபெறலாம்; அரசாங்கம் செய்ய இயலாததைக்கூட சில ஆண்டுகளில் செய்யலாம்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

30—7—67

மலைக்கோயிலூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு மாரியம்மன்கோயில் திடலில்; தலைவர்: நா. துரைசாமி; பேசுவோர்: திருப்பூர் அரங்கராசு, அர. வை. கண்ணன், மற்றும் பலர்.

மாயூரம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு புகைவண்டி நிலையம் அருகில்; தலைவர்: வி. சங்கையன்; பேசுவோர்: வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., என். கிட்டப்பா எம்.எல்.ஏ., எஸ். கணேசன் எம்.எல்.ஏ., இராசி. குயில்வளவன், தம்பி தேவேந்திரன் எம்.சி.

குழுக் கூட்டங்கள்

"தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொது உறுப்பினர் கூட்டம் 30—7—67 காலை 9-மணிக்கு சி. ஆர். கோலப்பா தலைமையில் நடைபெறும்; அதுபோது புதிய நிர்வாகிகள் தேர்தலும், வரவு-செலவுக் கணக்குப் பார்த்தலும் நடைபெறும்" என்று பொறுப்பாளர் சு. பத்மநாபன் அறிவிக்கிறார்.

"சென்னை 92-வது வட்ட சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் தேர்தல் 30—7—67 காலை 10-மணிக்கு பாரதீசுவரர் காலனி சலவைத் துறையில் க. துரை தலைமையில் நடைபெறும" என்று ஆலோசனைக் குழுத் தலைவர் கே. முனுசாமி அறிவிக்கிறார்.

வானொலியில் 'பஞ்ச பாண்டியர்'

தென்பாண்டி நாட்டில் கி. பி. 18-ம் நூற்றாண்டில் அரசுபுரிந்த இறுதிப் பாண்டியரான ஐம்பெருவழுதியர் ஒருங்கிணைந்து அந்நியர் ஆட்சியினை எதிர்த்து விடுதலைப் போர்புரிந்த வீர வரலாற்றின் அடிப்படையில், ஜலகண்டபுரம் ப. கண்ணன் தீட்டிய 'பஞ்ச பாண்டியர்' என்னும் வரலாற்று நாடகம், திருச்சி வானொலியில், 30—7—67 மாலை 3-30 மணிமுதல் 4-30 மணிவரை ஒலிபரப்பாகிறது.

ஒத்திவைப்பு

"மாயூரம் நகரில் 28—7—67-ல் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொள்ளவிருந்த வரவேற்புக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது; தேதி பின்னர் அறிவிக்கப்படும" என்று, தோழர் என். கிட்டப்பா எம்.எல்.ஏ. அறிவிக்கிறார்.

பெங்களூருக்கு

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் வருகை

"30—7—67 காலை 12-30 மணிக்கு பெங்களூர்—சிடி இரயில் நிலையத்தில், மலேசியாவில் சுற்றுப்பயணம் செய்து திரும்பிய அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களுக்கு சிறப்புமிக்க வரவேற்பு அளிக்கப்படும்.

"அன்று மாலை 6-மணிக்கு சிடி மார்க்கெட் அருகில் நடைபெறும் வரவேற்புப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., மற்றும் பலரும் பேசுவர்.

"கழகத் தோழர்கள் அனைவரும் இரயில் நிலைய வரவேற்பில் கொடிகளுடன் கலந்துகொண்டு சிறப்பித்தல் வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்"

என, கருநாடக மாநில தி. மு. க. அமைப்பாளர் தி. திராவிடமணி அறிவிக்கிறார்.

கலை நிகழ்ச்சிகள்

மதுரை உதயசூரியன் கலைக் குழுவின் கண்ணம்மா—தங்கராசு நடத்தும் 'நமது சாதனை' என்னும் கலை நிகழ்ச்சிகள்:—

சூலை 29: டி. புதுப்பட்டி; 30: சத்திரக்குடி; 31: தேரிருவேலி; ஆக. 13: தூத்துக்குடி; 15: எஸ். ஆர். பட்டணம்; 16: கன்னியப்பா பிள்ளைபட்டி; 23: விளாம்பட்டி.

தாராவியில் முத்தமிழ் தையல் நிலையம் திறப்பு விழா

பம்பாய்-தாராவியில், 30-7-67 காலை 9-மணியளவில், முத்தமிழ் தையல் நிலையத்தை தழவை மு. பரமசிவன் சேட் திறந்துவைப்பார்; கழகத் தோழர்கள் எஸ். தியாகராசன், ஆரியசங்காரன், த. மு. பொற்கோ, சு. நவயுவன், திருப்பணி சங்கர் உட்பட பலர் வாழ்த்துவர்; வரவேற்பாளர்: சேரை மு. இராசகோபாலன்.

எம். ஆர். இராதா மீதான வழக்கு ஒத்திவைப்பு

சென்னை, சூலை 27—

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கொலை செய்ய முயன்றதாகவும், தற்கொலை செய்துகொள்ள முயற்சித்ததாகவும் நடிகர் எம். ஆர். இராதா மீது தொடரப்பட்டிருக்கும் வழக்கு விசாரணை, இருதரப்பினரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஆகஸ்டு முதல் நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

செம்பனார் கோயிலுக்கு அண்ணா வருகை

சட்டமன்ற உறுப்பினருக்குக் கார் அன்பளிப்பு

செம்பனார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் விளநகர் எஸ். கணேசனுக்குத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் சார்பில் கார் அன்பளிப்பாக வழங்கப்படும்.

இந்த அன்பளிப்பு விழா 30–7–67 இரவு 9-மணிக்கு செம்பனார் கோயில் திலகர் திடலில் மன்னை நாராயணசாமி தலைமையில் நடைபெறும்; அறிஞர் அண்ணா அவர்கள் காரினை வழங்குவார்கள்.

தோழர்கள் கோ. சி. மணி, கா. சுப்ரவேலு எம்.பி., என். கிட்டப்பா எம்.எல்.ஏ. ஆகியோர் பேசுவர். (இரவு 8-மணிக்கு முருகு பாண்டியன் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

மாநிலத் திட்டங்கள் குறைக்கப்படும்?

நான்காம் திட்டத்துக்கும் நிதி நெருக்கடி

புதுடில்லி, சூலை 28—

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாம் ஆண்டாகிய 1967—68-ல் மத்திய அரசும், மாநில அரசுகளுமாகச் சேர்ந்து செய்கின்ற அரசுத் துறை முதலீடு ரூ. 2,246 கோடி; இத்திட்டத்தில் வேளாண்மைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1966—67-ல் செய்த முதலீடு ரூ. 2,221 கோடியாகும்.

இவ்வாண்டிற்கான தொகை ரூ. 25 கோடி கூடுதல் என்றாலும், இடைக் காலத்தில் ஏற்பட்ட விலைவாசி உயர்வின் காரணமாக, 1967—68-ல் செய்கின்ற முதலீட்டின் மதிப்பு சென்ற ஆண்டைவிடக் குறைவாகவே இருக்குமென்று அறிவிக்கப்படுகிறது.

நான்காவது திட்டத்துக்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 16,000 கோடி.

1967—68 முதலீடு ரூ. 2,246 கோடி; இதில் நாம் திரட்டக்கூடிய பணவசதி ரூ. 2,192 கோடி. இதில் பற்றுக்குறை நிதி முறையின் மூலம் மாநிலங்கள் செலவிடும் ரூ. 14 கோடி அடங்கும்.

இந்தப் பணவசதியானது தேவையைவிட ரூ. 5 கோடி குறைவு. இதை நிறைவு செய்வதற்கான வழிவகைகள் ஆய்வில் இருக்கின்றன; இது முடியாமற்போனால் மாநிலங்கள் தமது திட்டங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

மேற்கண்ட விவரங்களை, நாடாளுமன்றத்தில், திட்ட அமைச்சர் அசோக் மேத்தா, ஓர் அறிக்கையின் மூலம் வெளியிட்டு விளக்கினார்.

உணவு இறக்குமதிக்குச் செலவு கூடுகிறது

சூயஸ் அடைப்பின் விளைவு

"சூயஸ்கால்வாய் அடைப்புக்குப் பிறகு கப்பல்கள் ஆப்பிரிக்காவின் தென் கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டுவருவதால், மாதந்தோறும் கப்பல் கட்டணத்துக்காக அதிகப்படியாக மொத்தம் ரூ. 3 கோடிவீதம் செலவாகும்"

என்று மொரார்ஜிதேசாய், நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

"இதில் இப்போதையை உணவுத் தானிய இறக்குமதி அளவைக் கொண்டு மதிப்பிட்டால், உணவுக் கப்பல்களுக்காக மட்டும் மாதந்தோறும் ரூ. 1.45 கோடி அதிகம் செலவாகும்" எனவும் கூறினார்.

பொதுப் பணித்துறை அமைச்சர்
கலைஞர் கருணாநிதி
அவர்கள் தலைமையில்
கனகவல்லி பிரைமரி பள்ளிக் கட்டிட நிதிக்காக
ராகினி ரிக்ரியேஷன்ஸ்
சவுகார் ஜானகி— நாகேஷ் நடிக்கும்
'எதிர் நீச்சல்'
(கே. பாலச்சந்தர் எழுதியது)
29-7-67 மாலை 6-45மணிக்கு
சென்னை -- திருவல்லிக்கேணி
என்.கே.டி. கலாமண்டபத்தில்
கட்டணம்: ரூ. 15; 10; 5; 3; 2.

ம. பி. மாநிலத்தில் மறு தேர்தல் வருமா?

போபால், சூலை 26—

"மத்தியப்பிரதேசத்தில் இடைத் தேர்தல் நடத்த ஆணை பிறப்பிக்கப்பட்டால், அதற்காக ரூ. 27 இலட்சம் வரை செலவாகும்"

என்று தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது ரூ. 50 இலட்சம் செலவாயிற்றும். அப்போது நாடாளுமன்றத்திற்கும் தேர்தல் நடந்ததால் இச்செலவின் பாதியை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதாம்.

துணிவு உண்டா?

சம்யுக்த விதயாக் தளத்தின் தலைவரான குவாலியர் இராஜமாதா சிந்தியா இது குறித்துக் கருத்தறிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"மறு தேர்தல் நடத்தக் காங்கிரசுக் கட்சிக்குத் துணிவுவராது; அப்படி மறு தேர்தல் நடந்தால் காங்கிரசுக் கட்சி அடியோடு ஒழிக்கப்பட்டுவிடும். இதனை காங்கிரசு எம்.எல்.ஏ.-க்களும் அறிவர்; எனவே மறு தேர்தல் நடத்த விரும்பமாட்டார்கள்!"

கேரளத்து வீதிகளில் சீனப் பேனாக்கள் விற்பனை

திருவனந்தபுரம், சூலை 27

"சீனாவிலிருந்து கள்ளக்கடத்தல் மூலம் வரும் பேனாக்கள் கேரளத் தெருக்களில் விற்கப்படுவதைத் தடுப்பது மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது; இந்தப் பேனாக்களின் விற்பனையைத் தடுக்க மாநில அரசு நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது"

என்று சட்டமன்றத்தில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், கேரள முதலமைச்சர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு கூறினார்.

"இந்தப் பேனாக்கள் விற்பனை மூலம் கிடைக்கும் இலாபம் இடது பொதுவுடைமைக் கட்சிக்குக் கொடுக்கப்படுகிறது என்று அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?" என்று கேட்டபோது, 'இல்லை' என அவர் மறுத்தார்.

சென்னை மாநகராட்சி

கூட்டு உறுப்பினர் தேர்தல்

"சென்னை 4, 6, 10, 11 ஆகிய வட்டங்களுக்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களிலிருந்து உறுப்பினர்களைச் சென்னை மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ள, மன்றத்தின் சிறப்புக் கூட்டம் ஆகஸ்டு 8-ஆம் நாள் மாலை 4 மணிக்கு ரிப்பன் கட்டடத்தில் நடைபெறும்" என்று மேயர் இரா. சம்பந்தம் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.